1979 மார்ச் 17]

மாட்டு வண்டிக் காலத்தை விட்டுவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்களை விட்டு விட்டு சைக்கிள் ரிக்ஷாக்களை மெக்கனைஸ் செய்ய வேண்டும் என்ற நிலையில், ஆட்டோ போன்றவற்றைக் கொண்டு வரவேண்டும் என்று சொல்கிற நிலையில், மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள் ஓட்டுபவர்கள் ஆட்டோ அல்லது மெக்க னைஸ்ட் சைக்கிள் ரிக்ஷாஸ் விடுவதற்கு முன்வருவார்களே யானால் அவர்களுக்கு டி.இ.ஸி.ஸி. மூலம் உதவித் தொகை அளிக்க அரசாங்கம் முன் வரும்.

அரசுக்குச் சொந்தமான வாகனங்களை இன்ஸூர் செய்தல்.

*வினா எண். 432—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ் நாடு அரசுக்கு சொந்தமான பல்வேறு இலாக் காக்களைச் சேர்ந்த ஜீப் வண்டிகள், வேன்கள் இவைகளுக்கு இன் ஸூரன்ஸ் செய்யப்படுவதுண்டா ?

(ஆ) இவ்வண்டிகள் விபத்துக்குள்ளானால் உயிரிழப்பவர் களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை தரப்படுகிறதா ?

(இ) இவ்வண்டிகளால் ஏற்படும் விபத்துக்களில் உயிர் துறக்கும் நபர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை தர அரசு திட்டமிட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மத்திய அல்லது மாநில அரசு இலாக்காக்களை சேர்ந்த ஜீப் வேன் போன்ற வண்டிகளுக்கு இன்ஸூரன்ஸ் செய்வதிலிருந்து 1939 ம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டம் 94 (2) ஆவது பிரிவின் கீழ் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ) ஆம். அரசினால் தரப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : ஜீப்கள், வான்கள் இவற்றுக்கு இன்ஷூர் செய்வதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஜீப்கள், வான்கள் இவற்றில் செல்கிறபோது அதிகாரிகள் சில நேரங்களில் விபத்தில் சிக்குகிறார்கள். அல்லது இந்த ஜீப்கள், வான்கள் இவற்றில் சில நேரங்களில் பொது மக்கள் விபத்தில் சிக்குகிறார்கள், சிக்கி இறந்துவிடுகிறார்கள். தனியார் வண்டிகளில் சிக்கி விபத்தில் இறந்துவிட்டால் அவற்றை இன்ஷூர் செய்திருப்பதால் அந்தக் குடும்பத்திற்கு கணிசமான தொரு தொகை கிடைக்கிறது. ஆனால் அரசு வண்டிகளில்

சிக்கி விபத்தில் இறப்பவர்களின் குடும்பங்களுக்கு அந்தத் தொகை கிடைப்பதில்லை. ஆகவே இதற்கு அரசு ஒரு மாற்று ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 1976 ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட விதியின் அடிப்படையில் இன்ஷுரன்ஸ் அவர்கள் செய்யாமலிருந்தபோதிலும் அந்தச் சலுகைகள் அவர்களுக்குக் கிட்டும். எம்.ஏ.ஸி.டி மூலம் வழக்கு பதிவுசெய்கிறபோது ஈட்டுத் தொகை அவர்களுக்கு அங்கு தரப்படுகிறது.

திரு. ஆர். சண்முகம் : இது ஜீப் இன்ஷுரன்ஸ் சம்பந்தமாக யிருந்தாலும், ஜீப்களைப் பழுதுபார்க்க அரசாங்கம் பழுதுபார்க்கும் நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஜீப்களைப் பழுதுபார்க்க அவற்றை அங்கு அனுப்புவார்களானால் சரிவர அங்கேயிருப்பவர்கள் ஜீப்களைப் பழுது பார்க்காமல் 20, 25 நாட்கள் வைத்துக்கொண்டு எந்த நிலையில் அவை அனுப்பப்பட்டதோ அதே நிலையில் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே, அந்தப் பணியை ஏற்றிருக்கிற அதிகாரிகளுக்கு கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஒரு குறிப்பிட்ட துறையினரைச் சேர்ந்தவர்கள், உதாரணத்திற்காக கல்வித் துறை அல்லது பொதுப் பணித்துறை அவர்களுக்குரிய ஜீப்களை பழுது பார்க்க அனுப்பி 25 நாட்கள் அல்லது 30 நாட்கள் விட்டுவிடுவார்களானால் கண்டிப்பாக அவர்கள் அவர்களது பணிகளைச் செய்ய இயலாமல் போய்விடும். ஆகவே அந்தச் சிக்கல் இருக்காது என்று கருதுகிறேன். ஒருவேளை உறுப்பினர் அவர்கள், செம்மையாக ஜீப்கள் பழுதுபார்க்கப்படவில்லை என்று கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. அரசாங்கம் தற்போது ஒரு திட்டத்தைக் கொண்டு வர இருக்கிறது. எம். வி. ஒ. ல் போனஸ் திட்டத்தைக் கொண்டு வந்து அதன் மூலம் அங்கு செம்மையான முறையில் வாகனங்களைப் பழுதுபார்க்கவேண்டும் என்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்களின் தெளிவான பதில் கிடைக்க வில்லை. தனியார் வண்டிகளில் விபத்துக்கள் ஏற்படும் போது கொடுக்கப்படுகின்ற நஷ்ட ஈட்டுத் தொகையைப் போல் அரசாங்க வண்டிகளில் விபத்து ஏற்படும் போது கொடுக்கப்படுகிற நஷ்ட ஈட்டுத் தொகையும் சமமாக கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி கொடுக்கப்படவில்லை என்றால் ஒரே மாதிரியாக கொடுப்பதற்கு தகுந்தவாறு உத்தரவு மாற்ற அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1979 மார்ச் 17]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மோட்டார் ஆக்ஸிடன்ட்க்ளைம் டிரிபியூனலைப் பொறுத்தவரையில் தனியார் வாகனங்களில் விபத்து ஏற்பட்டால் ஒரு தொகையும், அரசாங்க வாகனங்களாக இருந்தால் ஒரு தொகையும் கொடுக்கவேண்டும் என்ற பாகுபாடு கிடையாது. எல்லா வாகனங்களுக்கும் ஒரே அளவில் தான் நஷ்ட ஈட்டுத் தொகை அளிக்கப்படுகிறது.

திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனை.

* வினா எண். 437—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், திருக்காட்டுப் பள்ளி பேரூராட்சியில் அமைந்துள்ள அரசினர் மருத்துவ மனையை விரிவு படுத்துகிற திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, நெடுங்காலமாக திருக்காட்டுப்பள்ளி மருத்துவ மனையில் போதிய அளவுக்கு விஸ்தரிப்பு இல்லாதிருப்பதின் காரணமாக அங்குள்ள ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து இந்த மருத்துவமனையை விரிவாக்கம் செய்யும் திட்டத்தை உருவாக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : தலைவர் அவர்களே, தற்போது அந்த மருத்துவ மனையில் 26 படுக்கைகள் உள்ளன. அதில் எட்டு ஆண் நோயாளிகளுக்கான படுக்கைகளும், 18 பெண் நோயாளிகளுக்கான படுக்கைகளும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எக்ஸ்ரே போன்ற ஆய்வு கூடங்கள் அங்கு இல்லை. 1974–75–76 ஆம் ஆண்டுகளில் உள்ள நிலைமைப்படி, அங்கே உள் நேயாளிகளாக சிகிச்சை பெற்றவர்கள் முறையே 28, 26, 29 என்றும், புற நோயாளிகளாக சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை முறையே 255, 300, 345 என்றும் இருக்கின்றன. ஆகவே இப்போதிருக்கின்ற படுக்கைகள் போதுமானவையாக இருக்கின்றன என்று அங்குள்ள மாவட்ட மருத்துவ அதிகாரியின் கணிப்பாகும். அதோடு மட்டுமல்லாமல், அங்கிருந்து அருகிலுள்ள தஞ்சையில் ராஜா மிராசுதார் மருத்துவ மனையிலும் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும் பல்வேறு நவீன தீவிர மருத்துவ வசதிகள் இருக்கின்றன. ஆகவே தற்போது திருக்காட்டுப்பள்ளியில் உள்ள மருத்துவ மனையை விஸ்தரிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.